**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 105/2025**

**வழக்கு சாட்சி: PW.6**

**தேதி: 24.07.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜாத்தி (LW8) | | |
| கணவர் **பெயர் :** | சொர்ணமுத்து | **தொழில்:** | இல்லத்தரசி |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | ராமசாமி நகர் | **வயது:** | **45/2026** |

(எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

**முதல் விசாரணை**

**1.** நான் சிவகங்கை ராமசாமி நகரில் வசித்து வருகிறேன். எனது சொந்த ஊர் நாட்டாகுடி கிராமம் எனது கணவர் எல்லை பாதுகாப்பு படையில் பணிபுரிகிறார். ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்து போன கணேசன் எனது அப்பா. 04.11.2024 அன்று காலை ராமசாமி நகரில் எனது விட்டில் இருந்த போது என் அம்மா போன் செய்து எனது அப்பாவை வெட்டிவிட்டதாகவும் மயக்கமாக இருப்பதாகவும் சொன்னார். நானும் எனது கணவரும் 05.30 மணிக்கு எல்லாம் நாட்டாகுடிக்கு சென்று விட்டோம்.

2. எங்கள் அப்பாவின் டீ கடைக்கு பக்கத்தில் எனது அப்பா மல்லாக்க கிடந்தார், உடலில் குத்தி இரத்தமாக இருந்தது. நாங்கள் போவதற்குள் இறந்து போனார். ஆஜர் எதிரி ஊருக்குள் அருவளை வைத்து 2,3 பேரை மிரட்டியதாக ஊரில் எல்லோரும் சொன்னார்கள். மேலும் ஆஜர் எதிரி பாலு என்பவரை வெட்டியதாகவும், அங்கு உள்ளவர்கள் பார்த்தாக சொன்னார்கள்.

3. இதற்கு முன்பு கும்பாபிஷேகத்திற்கு முன்பாக செப்டம்பர் மாதம் எங்கள் கடையில் வந்து ஆஜர் எதிரி சண்டை போட்தாக எனது அம்மா சொன்னார். தண்ணீர் வரவில்லை என்று பைப்பை எதிரி உடைத்ததை எனது அப்பா கேட்டதால் சண்டை போட்டதாக சொன்னார். பிள்ளையாரை கேணியில் போட்டதை எதிரியே ஒத்துக் கொண்டார்.

4. அன்று எதிரி அவர் மனைவியையும் வெட்டி விட்டு வந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் 05.30 மணிக்கு நாட்டாக்குடிக்கு சென்ற போது எனக்கு முன்பாகவே எனது அண்ணன் அ.சா.7 கண்ணன் அங்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். போலீசார் அங்கு வந்தார்களா என்றால் வந்தார்கள் எவ்வளவு நேரத்தில் வந்தார்கள் என்றால் நாங்கள் சென்ற 3/4 நேரத்தில் வந்தார்கள். பிள்ளையாரை தூக்கி கேணியில் போட்டதாக சம்பவம் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. குடிநீர் பையையும் யாரும் உடைக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனது அப்பாவிற்கும் எந்த முன்விரோதமும் இல்லை என்றால் சரியல்ல எனது அப்பாவின் மரணத்திற்கும் எதிரரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன விஷயங்கள், எனக்குநேரடியதாக தெரியாது என்றால் சரிதான் கேள்விபட்டது தான் என்றால் சரிதான்.

சாட்சியால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு, என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியம் படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் இன்றைய தினம் (24.07.2026) சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி, (மு.கூ.பொ)
சிவகங்கை.